

குழந்தைகளுக்குப் பரிசு

விலக்கப்பட்டு, மாவட்டப் பொறுப்பாளர் பதவிக்கு தளவாய் சுந்தரம் வந்த பிறகு அ.தி.மு.க.விற்கு புதிய உற்சாகம் பிறந்திருக்கிறது. இதனால் தி.மு.க. பாலிடிக்ஸ் திணறுகிறது என்ற பேச்சு எழுந்துள்ளது.

இந்நிலையில் நாம் அ.தி.மு.க.வின் அதிரடி பாலிடிக்ஸ் குறித்து நாகர்கோயில் நகர தி.மு.க. செயலர் வக்கீல் மகேஷிடம் பேசினோம். "பத்தாவது வார்டில் ரேஷன் கடை அமைக்க வேண்டும் என்பது உண்மைதான்! ஆனால் அரசு அதற்குத் தகுதியான நிலத்தைத் தேடிக் கொண்டிருக்கும் போதே ரியல் எஸ்டேட் அதிபரும், ஜெ. பேரவை நிர்வாகியுமான தனது நண்பர் நிலத்தில் ரேஷன் கடை கட்டி பாலிடிக்ஸ் செய்கிறார் முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம். இவர்கள் கட்டிய கட்டிடத்தை அரசு ஏற்றால்தான் அது ரேஷன் கடையாக முடியும். இல்லையென்றால் அது வெறும் கட்டிடம்தான். பத்தாவது வார்டு மக்களின் சிரமங்களைப் போக்கும் விதமாக அரசே ரேஷன் கடை அமைக்கும் பணியை நாங்கள் வேகப்படுத்தி

# தே இனி என் வேலை"!

## – முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் அதிரடி!

அவைத் தலைவர் பதவியும், காரவிளை செல்வனுக்கு அண்ணா தொழிற்சங்கத் தலைவர் பதவியும், ஞானசேகருக்கு பொருளாளர் பதவியும் வாங்கிக் கொடுத்து அவர்களை குஷிப்படுத்தியிருக்கிறார். இதனால் குமரி அ.தி.மு.க.வில் கணிசமானோர் தளவாய் தாசன்களாக மாறியுள்ளார்கள்.

இன்னொரு முக்கியமான விஷயமும் உண்டு. மாநில ஜெ. பேரவை செயலர் ஆன பிறகு அதிக நாட்கள் குமரி மாவட்டத்தில் தங்க முடியாத நிலையில் இருந்த தளவாய், மாவட்டப் பொறுப்பாளர் ஆன பிறகு குறைந்த பட்சம் ஐந்து நாட்களாவது மாவட்டத்தில் தங்க ஆரம்பித்திருக்கிறார். இவர் என்ன சொன்னாலும் கேட்கக் கூடிய மாவட்டச் செயலாளர் பச்சைமாலுடன் லேட்டஸ்ட்டாக ஏற்பட்ட மனவிரிசலைக் கூட தனது நடவடிக்கைகளால் சரி செய்திருக்கிறாராம் தளவாய் சுந்தரம்.

குமரி மாவட்டத்தில் நான்கு நகராட்சிகள், ஒன்பது ஒன்றியங்கள், 56 பேரூராட்சிகள், 99 ஊராட்சிகள் இருக்கின்றன. இவை அனைத்திலும் செயல் வீரர்கள் கூட்டம் நடத்திக் கட்சியைப் பலப்படுத்தத் திட்டமிட்டு வரும் தளவாய், கடந்த ஒரே மாதத்தில் நாகர்கோயில் நகராட்சி, ஐந்து ஒன்றியங்கள், 20 பேரூராட்சிகளில் செயல் வீரர்கள் கூட்டங்களை நடத்தி முடித்திருக்கிறார். மாவட்டச் செயலாளர் பச்சைமாலையும் அருகில் வைத்துக்கொண்டே அனைத்துக் கூட்டங்களையும் நடத்துகிறார் தளவாய். இவரே எல்லா செலவுகளையுமே ஏற்றுக் கொள்வதால் முழுமையாக ஒத்துழைக்கிறாராம் பச்சைமால். அது மட்டுமின்றி ஊழியர்கள் கூட்டத்தில் அறுசுவை விருந்தும் கொடுத்து அசத்துகிறார்களாம்.

கடந்த 24ஆம் தேதி நடந்த ஜெ. பிறந்த நாள் நிகழ்ச்சியன்றுகூட ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த மூன்று குழந்தைகளுக்குமே தலா மூன்று கிராமில் செயின், 1 கிராமில் மோதிரம் அணிவித்துள்ளார் தளவாய்.

ஆகமொத்தம் மாவட்டச் செயலாளர் பதவியிலிருந்து

வருகிறோம். அ.தி.மு.கவினர் செய்வது மலிவான அரசியல் என்பதை மக்கள் புரிந்து வைத்துள்ளார்கள். அ.தி.மு.க. அதிரடி பாலிடிக்ஸ் செய்தாலும் குமரி மாவட்ட மக்கள் தி.மு.க.வைத்தான் வெற்றி பெற வைப்பார்கள். இது கடந்த கால தேர்தல் முடிவுகள் காட்டும் பாடம்" என்றார் வேகமாக.

"அ.தி.மு.க.வில் அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தும் விதத்தில் இப்போது முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் செயல்படுகிறார். இதை முன்பே செய்திருந்தால் குமரி மாவட்ட அ.தி.மு.க.வில் இருந்து 'விலகல் படலம்' அரங்கேறியிருக்காதே" என்று அம்மாவட்ட அ.தி.மு.க.வினர் மத்தியில் ஒரு கருத்து நிலவுகிறது. இதை முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரத்திடம் சொல்லி கருத்துக் கேட்டோம். அவர், "நாகர்கோயில் நகராட்சியில் 51 வார்டுகள் இருக்கின்றன. இதில் பத்தாவது வார்டில் ரேஷன் கடை இல்லை. எனவேதான் இதை நகராட்சியில் தீர்மானமாக நிறைவேற்றிவிட்டு, நகராட்சித் தலைவரின் அனுமதியுடன் ரேஷன் கடையைத் திறந்தோம். இதை தி.மு.க.வினர் தடுத்தால் அதை மக்கள் பார்த்துக் கொள்வார்கள். அடுத்ததாக குமரி மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் அனைவருடனும் ஒத்துழைத்து கட்சியை வளர்ப்பதுதான் இனி என் வேலை" என்றார் சீரியஸாக.



மகேஷ்

"முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பிரசாத்துடன் இப்படி அனுசரணையாக தளவாய் சுந்தரம் போயிருந்தால் குமரி மாவட்ட அ.தி.மு.க. மேலும் பலம் பெற்றிருக்குமே" என்றும் இப்போதும் கூட அ.தி.மு.க.வினர் பேசுகிறார்கள். ஆனால் ஒரே உறைக்குள் இரண்டு கத்திகள் எப்படி இருக்க முடியும்?

▲